**செய்தி வெளியீடு எண்:52** **நாள்: 19.01.2008**

<u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சா அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஊராட்சி ஒன்றியம் வாரியாக தயாரித்துள்ள நீராதாரங்கள் திறன், நிலத்தடி நீராதார விபரம் குறித்த குறுந்தகட்டினை வெளியிட்டார்**

தமிழ்நாட்டில் உள்ள 30 ஊரக மாவட்டங்களிலும் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களையும் அடிப்படையாக கொண்டு அவற்றில் உள்ள நீராதாரங்களின் தன்மை மற்றும் நீர் வழங்கும் திறன், நில மேற்பரப்பின் அமைப்பு, நிலத்தடி நீர்வளம் மற்றும் நீராதாரத்தை மேம்படுத்த தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் திட்டங்களை தயாரித்து, தேவையான கட்டமைப்புகளை அமைக்க ஏற்ற பகுதிகள் போன்ற தகவல்களை உள்ளடக்கிய வரைப்படங்களை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்துள்ளது.

மாநில திட்ட குழுவின் கீழ் இயங்கி வருகின்ற தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு வாரியத்தின் மூலம் இப்பணிக்கென ரூபாய் 11 இலட்சம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு வழங்கப்பட்டு, இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில் உள்ள நீர் வளங்களின் நீடித்த நிலைத்த தன்மையை உறுதி படுத்தும் நோக்கத்துடன், ஒன்றிய அளவிலான வரைப்படங்களை தற்போதுள்ள நிலவரத்தின் அடிப்படையில் மேம்படுத்துவதை இலக்காக கொண்டு இப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ்வரைப்படங்கள் குறுதகடு வடிவத்திலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

இக்குறுந்தகட்டில் ஊராட்சி ஒன்றிய வாரியாக அதிக அளவில் நீரினை பயன்படுத்தும் ஒன்றியங்கள் கடின வகை பகுதிகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்டங்களில் நீராதார மேம்பாட்டு பணிகளான தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், நீர் உறிஞ்சி குழிகள் ஆகியவற்றை அமைப்பதற்கு ஏற்ற பகுதிகள் வரைப்படத்தில் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஒன்றியம் தோறும் பல்வேறு திட்டங்களின் கீழ் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் புதிய நீராதார அமைப்பு பணிகள் மற்றும் நிலத்தடி நீராதாரம், நில நீர் வளத்தின் நீடித்த நிலைத்த தன்மையை மேம்படுத்த அமைக்கப்பட வேண்டிய நீர் செறிவூட்டு கட்டமைப்புகளை அமைக்க வேண்டிய பகுதிகளை நிர்ணயித்திட இக்குறுந்தகடு மிகவும் பயன்படும். மேலும் நிலத்தடி நீர் மதிப்பீட்டு குழுமத்தின் ஆய்வின் படி நீர் பயன்பாட்டு விகிதாசாரம் ஒன்றிய வாரியாக இதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விபரங்கள் மற்றும் வரைப்படங்களை உள்ளடக்கிய ஊராட்சி ஒன்றிய வாரியான குறுந்தகடுகளை இன்று **(19.1.2008)** அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் தறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவர் முனைவர்.மு.நாகநாதன் அவர்கள் முன்னிலையில் வெளியிட்டார். இதனை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் திரு.சத்யபிரதா சாகு, இ.ஆ.ப., பெற்றுக் கொண்டார்.

இக்குறுந்தகடு வெளியீட்டு விழாவில் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி.கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.ஸ்வரன்சிங், இ.ஆ.ப., மற்றும் வாரிய உயரதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**